**<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,</u>**

**<u>விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்</u>**

**OS.No: 80/2023** **நாள் 01.12.2025.**

**பிவாசா.1, திரு.அரிராம்சேட்**

**பி.வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

வாசாஆ.1 அடமான கடன் பத்திரத்தை நான் தான் வாதிக்கு எழுதிக்கொடுத்தது என்றால் சரிதான். 04.09.2013 ம் தேதியில் நான் வாதியிடமிருந்து ரூ.13 லட்சத்தை அடமான கடனாக வாங்கியதாக தான் வாசாஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் ஆமாம். நான் வியாபாரம் சமந்தமாக வாதியிடமிருந்து ரூ.7 லட்சமும், மீதமுள்ள தொகை ரூ.6 லட்சத்திற்கு தலா ரூ.75 ஆயிரம் வீதம் 8 மாதத்திற்கு கடன் வாங்கியதாக சொல்லி வாசாஆ.1 ஆவணத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நான் தொகை ரூ.7 லட்சத்தை வியாபாரம் சம்மந்தமாக வாதியிடமிருந்து வாங்கினேன் என்பதை காண்பிக்கககூடிய ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ரூ.6 லட்சத்தை ரூ.75 ஆயிரம் வீதம் 8 தவணைகளில் வாங்கியதை காண்பிதற்கும் நான் ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ரூ.7 லட்சத்திற்கும் ரூ.6 லட்சத்திற்கும் நான் வட்டி தொகையை செலுத்தியதாக சொல்லும் போது அதற்கான ஆவணத்தையும் நான் தாக்கல் செய்யவில்லை. வாசாஆ.1 அடமான கடன் பத்திரத்தில் நான் சொல்வது போல் வட்டி தொகையை செலுத்தியதாகவும் வாதியனாவர் என்னிடமிருந்து வட்டி தொகையை பெற்றுக்கொண்டதாகவும் சொல்லி எந்தவிதமான குறிப்பும் வாசாஆ.1 ஆவணத்தில் காணப்படவில்லை என்றால் சரிதான். வாசாஆ.1 ஆவணத்தில் மாதம் ஒன்றுக்கு ரூ.100 க்கு ரூ.2 வட்டி வீதமாக சொல்லியுள்ளது என்றால் சரிதான். நான் ரூ.7 லடசத்திற்கு ரூ.4 வீதம் வட்டி தொகையை செலுத்தியதாக சொல்லும் போது எந்த மாதத்தில் இருந்து எந்த மாதம் வரை எவ்வளவு தொகையை அவ்வாறு செலுத்திவந்தன் என்பதை காட்டுவதற்கான ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் 04.09.2013 ம் தேதியில் மொத்தமாக ரூ.13 லட்சத்தை வாதியிடமிருந்து ஒரே தவணையில் வாசாஆ.1 ஆவணத்தின்பேரில் கடன் வாங்கினேன் என்று சொன்னால் அது சரியல்ல. நா்ன சொல்வது போல் வியாபார ரீதியாக ரூ.7 லட்சமும் மீதம் உள்ள தொகை ரூ.6 லட்சத்திற்கு தலா ரூ.75 ஆயிரம் வீதம் 8 தவணைகளில் வாங்கியதாக சொல்வது பொய் என்று சொன்னால் அது சரியல்ல. நான் உண்மையில் வாதியிடமிருந்து தவணை முறையில் கடன்வாங்கியிருந்தால் அது குறித்து வாசாஆ.1 ஆவணத்தில் எழுதப்பட்டிருக்கும் என்றால் சரிதான். நான் எந்த காலத்திலும் வாதிக்கு வட்டி தொகை எதுவும் கொடுக்கவில்லை என்றும் ரூ.4 வீதம் வட்டி தொகையாக செலுத்தியதாக நான் சொல்வது தவறு என்று சொன்னால் அது சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் ரூ.13 லட்சத்தை செலுத்துவதற்கு தயாராக உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.நான் வாதிக்கு செலுத்த வேண்டிய வட்டி தொகையை ஏமாற்ற வேண்டியே கூடுதலான வட்டி தொகையை நான்

செலுத்திவந்ததாகவும் அசலை மட்டும் செலுத்துவதற்கு நான் தயாராக உள்ளதாக சொல்லிருப்பது இந்த வழக்கிற்காக வேண்டி என்று சொன்னால் அது சரியல்ல. ரூ.13 லட்சத்தை நான் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்து கொள்வதற்கும் இதுநாள் வரை நடவடிக்கை எதுவும் எடுத்துக்கொள்ளவில்லை என்றால் அது சரிதான். வாதியானவர் எனக்கு வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பை அனுப்பியிருந்தார். வாதியானவர் வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு அனுப்பிய பின்பு பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பேசப்பட்டதாக நான் சொல்லும போது பஞ்சாயத்தார்கள் யார் யார் என்றும் அவர்களுடைய பெயர் முகவரியை நான் தாக்கல்ங செய்துள்ள எதிர்வழக்குரையிலும் சாட்சிய பிரமாண பத்திரிக்கையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். வாதியானவர் வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு அனுப்பிய பின்பு அவர்யாரிடமும் பஞ்சாயத்து எதுவும் பேசவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. வாதி எந்த காலத்திலும் அசல் தொகையை மட்டும் கொடுத்தால் போதுமென்று எந்த காலத்திலும் என்னிடத்தில் ஒப்புக்கொள்ள வில்லை என்றால் அது சரியல்ல. வாசாஆ.1 அடமான கடன் பேரில் நான் தொகை ரூ.13 லட்சமும் அதற்கு நாளது தேதி வரையிலும் வட்டி தொகையை செலுத்த வேண்டும் என்று சொன்னால் அதுசரியல்ல. எனவே வாதியின் வழக்கை அனுமதிக்க வேண்டியது என்று சொன்னால் அது சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 01st day of December 2025.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டடச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டடச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.